# பாவலர் ஊஞ்சல் கவிதைத் தொகுப்பில் தமிழரின் வாழ்வியல் முறைகள்

41

ப.இளம்பரிதி & முனைவர் அ.பாரதிராணி
தமிழ் உயராய்வு மையம்
அழகப்பா அரசு கலைக்கல்லூரி, காரைக்குடி - 630 003
email id: parithi978791@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

உலக உயிர்கள் அனைத்திற்கும்வாழ்வியல் இடமாக புவிப்பரப்பு அமைந்துள்ளன. அவை நிலத்தையும், கடலையும், எல்லைகளாக கொண்டு மன்னர்கள் ஆட்சி செய்தமையை சங்க இலக்கியம் முதல் புலவர் இக்கால நவீன கவிஞர்கள் வரை பாடல்கள் வழி எடுத்துரைத்துள்ளன. பண்டைய காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் இயற்கையை வழிபடுதல் தொடங்கி கற்ற ஒருவனை பதித்தல் அனைத்துவித நற்பண்புகளை கொண்டு சிறந்து விளங்கின. இதன் காரணமாக பிற நாட்டு அறிஞர்களும் தமிழரை போற்றிவந்தனர். அத்தகைய தமிழரின் இறைமையுணர்வு, கல்வி, விருந்தோம்பல், மனிதநேயம், வீரம், ஆகியவற்றை பற்றி ஊஞ்சல் கவிதைகள் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கலைச்சொற்கள்**

துணிவு, அன்பு, அகம், வீரம், திரவியம்

**முன்னுரை**

தமிழர்கள் ஐவகை நிலங்களை அடிப்படையாக கொண்டு வாழ்கையை தொடங்கினர். சமூக வாழ்வில் அகம், புறம், என்கிற இரு பகுதிகளாக கொண்டு வாழ்வை மேம்படுத்த அனைத்து உயிர்களின் மீதும் அன்பு செலுத்தினர், அற தவறாமல் மன்னர் ஆட்சியின் கீழ் சிறப்புற்று விளங்கினர், அம்மக்களின் வாழ்வில் சிறப்படைய அன்பு, கல்வி, பிறரை நேசித்தல் வீரம் ஆகியவை முதற்காரணமாக அமைந்திருக்கின்றன. இதனை பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இறையுணர்வு**

இவ்வுலகில் எல்லாவற்றிற்கும் அடிப்படையாய் இருப்பது கடவுள். உலக உயிர்கள் அனைத்திற்கும் முதன்மையாக அமைவது. அத்தகைய முதற்பொருளான இறைவன் காலம், இடமற்ற உரு உணர்வு, எதுவுமில்லா அறிவுமயமாகவும், அவை மக்கள் மனத்தால் அறிதியிட்டு கூற இயலா ஒன்றாகும். உருவமற்ற கடவுளை வணங்கி தனக்கு எதுவும் வேண்டுவது, உணர்வுடையது மக்கள் பண்பு, அவ்வாறு சங்க கால மக்கள் ஐவகை பூதங்களை இறைவனாக வணங்கினர். அவை வாழ்வு உயர உறுதுணையாக அமைந்திருந்தன. அத்தகைய இறைவனின் சிறப்பை முல்லைவாணன்

**“ஈயெறும்பும் உட்பட**

**உலகிலுள்ள யாவையும்**

**தாய்மையோடு காத்திடும்**

**தலைபனாவான் இறைவனே”**

எறும்பு முதல் ஆறறிவு உயிர்வரை உலகில் இருக்கின்ற அனைத்து உயிர்களின் மீது அன்பு செலுத்தி தலைவனாக இருக்கின்றவன். இறைவன் என விளக்குகிறார், இதனை மாணிக்கவாசகர்

**“அரவணைத்து அன்பூட்டும் தாய்போ லாவான்**

**ஆறைகொண்டுறிவூட்டும் தந்தை போல்வான்**

**உரமூட்டும் உயர்கல்விக் காசானாவான்”**[1] (ப.32)

அரவணைத்து அன்பு செலுத்துவதில் அன்னையாகவும் அறிவூட்டுவதில் தந்தையாகவும், கல்வி அளிப்பதில் ஆசானாகவும் விளங்குவார் இறைவன் என வர்ணிக்கப்பட்டுள்ளது.

**கல்வி**

உலக உயிர்களிடம் இருந்து தன்னை வேறுபடுத்தி காட்டுவது கல்வியாகும். மனதிற்கு மிகவும் இன்றியாமையாதது செல்வந்தன் ஒருவனிடம் இருக்கும் செல்வம் சில நாட்களில் அழிந்துவிடும். கல்விச் செல்வமானது இவ்வுலகம் விட்டு நிங்கினாலும் அழியாமல் சிறந்து விளங்குகிறது. ஏழ்மையில் வாழும் மனிதன் உயர்நிலையில் சிறந்து விளங்க. கருவியாக பயன்படுவது கல்வியாகும். அவற்றின் அழகை முல்லைவாணன்

**“எண்ணும் எழுத்தும் இருவிழியாம்**

**துயர் போக்கும் நல்வழியைத்**

**தொடர்ந்திட வாழ்வில் புகழொளியாம்”**

கல்வியின் இருகண்களாக விளங்குவது எண்ணும் எழுத்துமாகும். அவற்றை முறையாக கற்றால் வாழ்வில் புகழை பெறலாம். என விளக்கியுள்ளார், இதனை ஔவையார்,

**“மன்னனும் மாசறக் கற்றேனுஞ்சீர்தூக்கின்**

**மன்னனிற் கற்றேன் சிறப்புடையன் – மன்னனுக்குத்**

**தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்**

**சென்றவிட மெல்லாஞ் சிறப்பு”2** (ப.54)

கல்வியில் சிறந்து ஒருவனை மன்னன் உயர்ந்து போற்றுவர் என கல்வியின் அழகை விளக்கியுள்ளார்.

**அன்பு**

மனிதன் தனக்கென்று வாழாமல் பிறருக்கு என்று அன்புடன் வாழ்ந்தால் வாழ்க்கை இன்பமாக அமைகிறது. இதனை வள்ளுவர் அன்பின் வழியது உயிர்நிலை என்றும் திருமூலர் அன்பே சிவன் என்று சிறப்பித்துள்ளார். அன்பால் மன்னுயிர்க்கு இரங்கி மனடறிய நம்பிய வழியில் வாழ்ந்தால் இம்மை வாழ்விலே. கண்ணெதிரே இறைவனைக் காணலாம். அன்பில்லாத இடத்து நிகழ்வது துன்பம், பண்டைய மக்கள் அன்பினை அனைத்து மக்களிடம் செலுத்தினர். அதன் சிறப்பை முல்லைவாணன்

**“அன்பே என்றும் வழிந்துணையாம்**

**அகல் நிலம் தனையே இணைப்பதுவாம்"**

அன்பு வாழ்விற்கு வழித்துணையாக வருவது மட்டும் இன்றி அனைத்து மக்களையும் ஒன்றிணைய வழிவகை செய்கிறது என உணர்த்துகிறார். இவற்றை வள்ளுவர்,

**"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரந்தளிர்ந் தற்று"**[3] (ப.34)

அன்பில்லாதவர் வாழ்வு உயிரற்ற மரம்போல் ஆகும். அன்பின் நிலைமை எடுத்துரைத்துள்ளார்.

**நட்பு**

தனிமனிதனைச் சமுதாயத்துடன் பிணைப்பது நட்பு என்ற முன்றெழுத்து சொல்லாகும். மனிதர்களிடம் தோன்றும் நட்பினால் மனம் விரிவடைந்து நல்லுணர்வுகள் செழித்தோங்கும் உலகளாவிய ஒருமைப்பாட்டு நட்பினை "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என தமிழ் இலக்கியம் விளக்குகிறது. நட்பின் அழகை வள்ளுவர் முகம் மட்டும் மலருமாறு நட்பு கொள்வது நட்பாகாது, அகமும் முகமும் மலர்வதே நட்பூ என தெளிவாக விளக்கியுள்ளார். இத்தகைய நட்பினை முல்லைவாணன்

**"எல்லா ரும்நமக்கு அன்பார்கள் தாம் இதில்**
**யாரும் இல்லைஒரு வம்பருந்தாம்**
**பொல்லா ரும்இல்லை அன்பினுக்கே ஒரு**
**புன்னகை தந்திடும் நெஞ்சினிப்பே"**

அனைவரும் நம்முடைய நண்பர்கள், எல்லோரிடமும் நட்புடன் பழகி புன்னகையை பரிசாக அளிப்பேன் என்று விளக்கியுள்ளார்.

இதனை ஔவையார் மூதுரையில்

**"அற்ற குளத்தின் அறு நீர்ப் பறவைபோல்**
**உற்றுழித் தீர்வார் உறவு அல்லர், அக்குளத்தில்**
**கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே**
**ஓட்டி உறுவார் உரவு"**[4] (ப.308)

குளத்தில் நீர் இருக்கும் வரை வாழும் பறவைகளை போல் இல்லாமல் தண்ணீர் இல்லாமலும் இருக்கின்ற மாணவர்களை போல் வறுமையிலும் அவனை பிரியாதவர்கள் தான் உண்மையான நண்பர்கள் ஆவர். மக்கள் வாழ்வில் அறத்திற்கு அடுத்த நிலை இருப்பவை பொருள் ஆகும். வாழ்வில் சமூக உயர்விற்கும், இல்லறவாழ்விற்கும் பயன்படுவது செல்வம் ஆகும். சங்க கால மக்கள் பலரும் செல்வத்தை சேமிப்பதற்கு தரைவழியாகவும், கடல் வழியாகவும் வாணிபம் செய்தனர், திரைக்கடல் ஓடியும் திரவியம் தேடு என்று ஔவையாரும் பாடியுள்ளார். பொருளை உண்மையான வழியில் சேகரித்தால் அறமும் இன்பமும் வாழ்வை சிறப்பாக்கும். இதனை முல்லைவாணன் அவர்கள்

**"சிறுகச் சிறுகத்**
**தேன் சேர்த்துச்**
**சேமிப் புயர்வை உணர்த்திவிடும்"**

சிறுக சிறிதாக பொருளை சேர்த்தால் வாழ்வில் உயரலாம், இதனை

**"மெய் வலியும் செல்நிலையும்வாழ்நாளும் – தூவொழுக்கம்**
**மெய்யா அளிக்கும்வெறுக்கை இலார் – வையகத்தும்**
**பல்கிளையும் வாடாப் பனையனைதோள்**
**ஒல்கு உயிர் நீத்து ஆரும்நரகு"[5]** (ப.179)

செல்வம் உடையோன் உடல் வன்மையாக தம்வாக்கு, எங்கும் செல்லும் நிலைமையையும், நீண்டதூய ஒழுக்கத்தை கொடுக்கும் செல்வம் இல்லாதார் பல சுற்றுள் துன்பம் அவையாவும் மூங்கில்போல் தோளையுடைய மனைவி வருந்துமாறு உமையோர் நரகத்திற்கு செல்வர் இன்னிலை வாயிலாக பொய்யார் எடுத்துரைக்கின்றார்.

**வீரம்**

சங்க கால மக்கள் பலரும் ஒன்றிணைந்து ஒரு சமூகமாக வாழ்ந்து வந்தனர். அவர்கள் தங்கள் நிலப்ரபப்பை பாதுகாக்க அவர் முதல் பெண்கள் வரை வீரத்துடன் திகழ்ந்தனர். மேலும் காட்டுவிலங்குகளை வேட்டையாடவும் துணிவுடன் பயிற்சி பெற்றனர். மன்னர்கள் பலர் வீரத்துடன் செயல்பட்டு பல்வேறு நாடுகளை கைப்பற்றி ஆதிக்கம் செலுத்தினர், இதனை முல்லைவாணன்,

**"படைப்புக்குச் சிறப்ளிக்கும் வளமைப் பயிர்**
**துணிவுடைமை கொள்ள நீங்கும் துயர்"**

துணிவுடன் இருந்தால் துன்பம் விலகும் இதனை,

**"ஈன்றுபுறந் தருதல் என்தலைக் கடனே**
**சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே"[6]** (ப.12)

போர்களில் புறமுதுகாட்டாது நிமிர்ந்து நின்று அஞ்சாமல் போர்த்தொடுத்தல் என்கிற சிறந்த வீரத்தை கற்றுக்கொடுப்பதே அன்னையின் கடமையாகும். அறப்போரில் யானை வென்றுவிடுதல் கேனின் சிரச்சிறப்பாகும் என வீரத்தை அழகாக விளக்கியுள்ளார்.

**தொகுப்புரை**

- சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் ஐந்திணையாக நிலப்பரப்பை கொண்டு வாழ்வை தொடங்கினர்
- மக்கள் இயற்கையை இறைவனை முதன்மையாக கொண்டு வணங்கினர்.
- மனிதருக்கு அன்பு ஒன்று நிலையானது, அதனை அனைத்து உயிர்களிடம் செலுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.
- கல்வி மக்களின் ஏழ்மையை போக்கும் மருந்தாகவும், நாற்பண்புகளை வளர்க்கும் இலக்கியமாக உள்ளன.
- வீரம் ஆண்கள் மட்டும்மில்லாமல் பெண்களும் வீரத்துடன் வாழ்ந்தனர்.
- சங்க மக்களின் நற்பண்புகள் உலக நாடுகள் போற்றும் வகையில் சிறப்பாக உள்ளது.

**சான்றெண் விளக்கம்**

1. ஆ.மு.தமிழ்வேந்தன், தென் தமிழ்த் தேறல், ப.32.
2. மறைமலையடிகள், அறிவுரைக் கொத்து, ப.54.
3. வே.முத்துலக்குமி, சீர் தரு செல்வம், ப.34.
4. தாயம்மாள் அறவாணன், அவ்வையார் அன்று முதல் இன்று வரை, ப.308
5. ஏ.சங்கரசுப்பிரமணியன், நீதி நூல் புகட்டும் நன்னெறிகள், ப.179.
6. சரளா ராஜகோபாலன், இலக்கிய விருந்து, ப.12.

**துணைநூற்பட்டியல்**

1, தமிழ்வேந்தன், ஆ.மு - தென் தமிழ்த் தேறல்
முத்துப் பதிப்பகம்
5, பார்த்தசாரதிலே ஆவுட்,
வி'ழுப்பும்,
முதற்பதிப்பு – ஜுலை 1991

2. மறைமலையடிகள் - அறிவுரைக்கொத்து
பாரிநிலையம்
59 பிராட்வே, சென்னை – 1
முதற்பதிப்பு – 1921

3. முத்துலக்குமி, வே - சீத் தரு செல்வம்
அனிதா பதிப்பகம்,
22/18, சம்புகேஸ்வரர் நகர்,
திருவானைக்கோவில் – 620005
முதற்பதிப்பு – டிசம்பர் 2002

4. தாயம்மாள் அறவாணன் - அவ்வையார் அன்று முதல் இன்று வரை
பச்சைப்பசேல்
11, இரண்டாம் தெரு,
மோகன் நகர், புதுச்சேரி
பதிப்பு, செப்டம்பர் 2000

5. சங்கரசுப்பிரமணியன், ஏ - நீதி நூல்புகட்டும் நன்னெறிகள்
மணிமேகலைப் பிரசுரம்
7, தணிகாசலம் சாலை
தியாகராய நகர், சென்னை – 600 001
முதற்பதிப்பு – 2021

6. சரளா இராசகோபாலன் - ஒளிப்பதிக்கம்
63, டாக்டர் அரங்காச்சாரி சாலை
சென்னை – 600 018
முதற்பதிப்பு டிசம்பர் 1993